Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 224/2018**

**வழக்கு சாட்சி எண். PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நீலமேகம் | தொழில் | : | |
| கிராமம் | : | பாப்பிரெட்டிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | பாப்பிரெட்டிப்பட்டி | வயது | : | 54 |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி ஆஜர் இல்லை. 5ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th** Day of **July 2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சத்தியமங்கலம் அரசு சந்தனமரகிடங்கில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 17.04.2015ம் தேதி மொரப்பூர் வனசரகத்தில் பூதநத்தம் பிரிவில் வனவராக பணிபுரிந்துவந்தபோது வனச்சரக அலுவலர் அவர்களின் தலைமையில் தனி குழுவாக ரோந்து பணி மேற்கொண்டிருந்தபோது அரூர் காப்புக்காடு அருகே வாகனங்களை தணிக்கை செய்துகொண்டிருந்தபோது அதிகாலை 3 மணியளவில் டாடா இண்டிகா என்ற காரை சோதனை செய்தபோது அதில் 5 நபர்கள் இருந்தார்கள். காரை சோதனை செய்தபோது சிவப்பு சந்தனமரக்கட்டைகள்

15 துண்டுகள் இருந்தது. எதிரிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றபோது எதிரிகள் சிவப்பு சந்தனமரக்கட்டைகளை கடத்தி வந்ததை ஒப்புக்கொண்டார்கள். எதிரி மகேந்திரன் மற்றும் எதிரி கார்த்திக் ஆகியோர் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களை நான் பதிவு செய்தேன். பிடிபட்ட எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களை மொரப்பூர் வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்துவந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி செயல்களுக்கு நான் வனச்சரக அலுவலருக்கு நான் உதவியாக இருந்தேன். பிடிபட்ட சிவப்பு சந்தனமரக்கட்டைகளை எடைபோட்டு எடை பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதற்கு நான் உதவியாக இருந்தேன். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த உதவியாக இருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**